செய்தி வெளியீடு எண் :08 நாள் : 10.03.2018

***தேனி மாவட்டம்,***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி, காடுகளில் ஏற்படும் தீ விபத்து குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது :-***

*****

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி, வனத்துறை, ஊரக வளர்ச்சிதுறை மற்றும் வருவாய்துறைகளின் சார்பில் காடுகளில் ஏற்படும் தீ விபத்து குறித்து விழிப்புணர்வு முகாம் போடிநாயக்கனூர் வட்டம் முந்தல் கிராமத்தில் (09.03.2018) அன்று நடைபெற்றது.

விழிப்புணர்வு முகாமின்போது, தேனி மாவட்டம் அதிகமான மலைத்தொடர்களைக் கொண்ட மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட வனங்களில் அரிய வகை தாவரங்கள், உயிரினங்கள் வாழ்கின்றன, தற்சமயம் அவ்வப்போது வனங்களில் எதிர்பாராவிதமாக தீ விபத்துகள் ஏற்படுகிறது. இதனால், மரங்கள் மட்டும் அழிவதில்லை, அங்கிருக்கும் தாவரங்கள், மூலிகைகள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புழுக்கள், நுண்ணுயிர்கள் ஆகியவைகளும் அழிந்து விடக்கூடிய நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளை தடுக்கும் பொருட்டு காடுகளினால் மனிதர்களுக்கு ஏற்படும் பயன்கள் குறித்தும், மரம் வளர்ப்பதனால் வெப்பமயமாதல் தவிர்க்கப்பட்டு மழைப்பொழிவு ஏற்படுவது குறித்தும், பொதுமக்களிடையே எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், காடுகள், மனிதர்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் வாழ்வதற்கு தேவையான பிரான வாயுவினை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக காடுகள் விளங்குகிறது. மரங்கள் மற்றும் தாவரங்கள் மனிதர்கள், விலங்குகள், தொழிற்சாலைகளில் வெளியேறும் கரியமில வாயுவினை (கார்பன்-டை-ஆக்ஸைடு) உட்கொண்டு பிராண வாயுவினை (ஆக்சிஜன்) வெளியிடுகிறது. அனைத்து இடங்களிலும் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது கடினமான செயலாகும், காடுகளில் வாழும் விலங்குகள், பறவைகள் பழங்கள், விதைகளை உட்கொண்டு பின்பு வெளியேற்றக்கூடிய எச்சத்தின் மூலம் அதிகளவில் இயற்கையாகவே வளர்ந்து காடுகள் உருவாக்கப்படுகின்றன. எனவே, வன உயிரினங்களை பாதுகாத்திட வேண்டுமென்றால் அதன் வாழ்விடங்களான வனங்களையும் பாதுகாத்திட வேண்டும்.

ஆகவே, மலைப்பகுதிகளில் வசிக்கக்கூடிய பொதுமக்கள் இயற்கையின் கொடையாக விளங்கக்கூடிய காடுகளில் தீ விபத்துகள் போன்ற இடர்பாடுகள் ஏற்படாதவண்ணம் விழிப்புணர்வுடன் இருந்து வனங்களையும், வன விலங்குகளையும் பாதுகாத்திட வேண்டும் என பொதுமக்களிடம் அரசு அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அரசு அலுவலர்கள் முன்னிலையில் வனம் மற்றும் வன உயிரினங்களை பாதுகாப்பது குறித்த உறுதி மொழி பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர்.

இம்முகாமில், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சென்னியப்பன் அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாரதமணி அவர்கள், திரு.சுருளிவேல் அவர்கள், வனச்சரகர் திரு.அன்பு அவர்கள், வட்டாட்சியர் திருமதி ராணி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**